# இம்புல்பே பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 13 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 28 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய இம்புல்பே பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இம்புல்பே பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் முத்திரைக் கட்டணக் கடன்பட்டோர் மீதி ரூபா 2,984,878 ஆகும். முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் பெறப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 7.206,925 ஆகும். அதற்கமைய, கடன்பட்டோர் மீதியிலும் பார்க்க ரூபா 4,222,047 பெறுவனவுகள் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யாமையால் மீளாய்வாண்டு முடிவில் முத்திரைக் கட்டணக் கடன்பட்டோர் மீதி அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 168,554 க்கான நிலையான சொத்துக்கள் மீண்டுவருஞ் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(இ) நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 4 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத்தொகை 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,156,626 ஆகவிருந்தது. உப பதிவேட்டின் பிரகாரம் கணக்கீட்டு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 7,961,655 ஆகவிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,316,007 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,870,899 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 160 | 104 | 102 |
| (ii) | குத்தகை வாடகை | 76 | 80 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 375 | 435 | - |
| (vi) | பிற வருவாய் | 12,473 | 10,019 | 6,543 |

**2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 170,249 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,271,720 |

**2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

டொஷீபா நிழற்பிரதி இயந்திரத்திற்கு உதிரிப்பாகங்களைப் பெறுவது மற்றும் பழுதுபார்ப்பது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட 2011 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 05003 P இலக்க இன்வொய்சானது மாகாணப் பணிப்பாளர், மாகாணக் கமத்தொழில் பணிப்பாளர் அலுவலகம், கெடன்கம, இரத்தினபுரி எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இன்வொய்ஸ் ஆகும். வேறு நிறுவனம் ஒன்றினது இன்வொய்ஸ்சிற்கு பிரதேச சபை கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டிய தேவை சம்பந்தமாகக் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறே, 2012 ஜுன் 26 ஆந் திகதிய 416 ஆம் இலக்க இன்வொய்சானது நிழற் பிரதி ஒன்றினது கையால் எழுதப்பட்ட இன்வொய்சாக இருந்ததுடன் அதற்குரிய காசோலை இன்வொய்சில் குறிப்பிடப்பட்ட டீ.எஸ்.கே எனும் பெயருக்கு வரையப்பட்டிருந்தது.

**2.4 ஒப்பந்த நிர்வாகம்**

அழுபிட்டிய கீனகஹஎல்ல வீதியில் தேவைப்படும் இடத்தில் கொங்கீரீட் இடுவதற்கு ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை – 2012 அபிவிருத்தி எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 1,000,000 நிதி வழங்கப்பட்டிருந்தது. இந் நிர்மாண வேலைக்கு இம்புல்பே அழுபிட்டிய பிரகத் கொவி அமைப்புடன் ரூபா 980,000 க்கான உடன்படிக்கையொன்று 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதியன்று செய்துகொள்ளப்பட்டது. மதிப்பீட்டின் விடய இலக்கம் 03 க்கமைய அங்கீகரிக்கப்பட்ட மண் வழங்கப்படுவதற்கு 36.80 கன மீட்டருக்கு ரூபா 25,480 அந்த மண்ணைப் பரப்புவதற்கு விடய இலக்கம் 08 க்கமைய ரூபா 10,668 என மொத்தமாக ரூபா 36,148 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவ் வேலைகள் செய்யப்படாமை 2013 ஏப்ரல் 04 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது புலனாகியது.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) இம்புல்பே பிரதேச சபைக்குச் சொந்தமான 10 நீர்த்திட்டங்களில் 6 நட்டத்தில் இயங்குவதும் நீர்த்திட்டங்களது 2012 ஆம் ஆண்டிற்கான ஒட்டு மொத்த வருமானத்தையும் செலவையும் பார்க்குமிடத்து நட்டம் ரூபா 372,940 ஆகுமெனவும் அவதானிக்கப்பட்டது. அலுத்நுவர நீர்த்திட்டத்திற்குப் பெறப்பட்ட கடனில் தவனைப்பணம் மற்றும் வட்டியாக மீளாய்வாண்டில் ரூபா 629,497 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நீர்த்திட்டப் பராமரிப்பிற்கு ரூபா 679,456 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, நீர்த்திட்டத்தால் சபையின் நிதியத்திற்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த நட்டம் ரூபா 1,681,893 ஆகும். அவ்வாறே, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர்க்கட்டண நிலுவை ரூபா 1,352,111 ஆகும். நீர் வழங்கல் கட்டணம் ரூபா 546,750 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின்போது 18 செலவினங்களுக்கு மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 909,500 ஆகும். இதனைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டம்
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்